**செ.வெ.எண்:22** **நாள்:10.11.2018**

## கரூர் மாவட்டம்

## புறக்கடை கோழி வளர்ப்புத் திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் நவம்பர் 15-ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம்-மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஊரக புறக்கடை கோழி வளர்ப்பு திட்டம் 2018-19ம் ஆண்டிற்கு செயல்படுத்திடும் பொருட்டு கரூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 200 பெண் பயனாளிகள் வீதம் 8 ஒன்றியங்களில் மொத்தம் 1600 பெண் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளிகள் தமிழ்நாடு மாநில கிராமப்புற வாழ்வாதார திட்டத்தின் மூலம் பெண் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ஏழைகளின் பங்கு அடையாள எண் வைத்திருக்க வேண்டும். சொந்த கிராமத்தில் நிலையாக வசித்து வர வேண்டும். மேலும், அரசு திட்டத்தின்கீழ் இலவச கறவை பசுக்கள், இலவச வெள்ளாடுகள், செம்மறியாடுகள் மற்றும் கோழி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முந்தைய ஆண்டுகளில் பயன்பெற்றவராக இருக்கக்கூடாது.

ஆதரவற்ற பெண்கள், விதவை, மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அரசு விதிமுறைகளின்படி 30% SC,ST பெண் பயனாளிகள் தேர்வு செய்யப்படுவர். தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு 4 வார வயதுள்ள 50 அசில் நாட்டு ரக கோழிக்குஞ்சுகள் ரூ.3750/- க்கு இலவசமாக வழங்கப்படும். மேலும், 30 சதுர அடி பரப்புள்ள இரவுக் கோழிகள் அடைக்கும் கூண்டிற்கு ரூ.2500/- மானியம் வழங்கப்படும். இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் அருகிலுள்ள கால்நடை மருந்தக, கால்நடை உதவி மருத்துவரை அணுகி நவம்பர் 15ம் தேதிக்குள் விண்ணப்பித்து பயன்பெறலாம்.

இவ்வாறு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**

**கரூர்.**